REGISTERED No. M. 1014.

உ

ஸ்ரீ வாணீ சகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

விச்சைவிரும்பு. கேள்விமுயல்.
வீடுபெறநில்.

வெண்டாமரை ௫.	1917-ம் ஆ௵ ஜூலை மீ	இதழ் ௭.

பத்திராதிபர்:— சி. பங்காருப் பத்தர்
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்,
புதுவை.

வருடச் சந்தா

உள்ளூரார்க்கு ரூ 1	வெளிநாட்டிக்கு ரூ 2
வெளியூரார்க்கு ரூ 1½	தனிச் சஞ்சிகை அணா 2

உள்ளுறை.

	பக்கம்.
யசோதாகாவியம் :— பத்திராதிபர்.	126
தமிழ் மருத்துவப் பெட்டி :— ஓர் மருத்துவன்.	130
கண்மணி கமலா :— ஸ்ரீ தம்பி – புருஷோத்தமப்பிள்ளை. ...	133
ஓர் நன்றியறிதல் :— வித்தை விரும்பி.	138
சுகாதாரம் :— திராவிடன்.	138
புதுவை ஆனந்தாசிரம சாதுமகாசங்கத்தின் 3-வது வருட மஹோற்சவம் :— நடந்தது நவில்வோன்.	141
படிக்காசுப்புலவர் சரிதம் :— ஸ்ரீ சி. கு. நாராயணசாமி முதலியார், கோயமுத்தூர்.	143
நியாயமாலா :— இதோபதேசி.	148

ஸ்ரீமான் லூய் - சின்னய - ஞானப்பிரகாச முதலியாரவர்கள் நன்கொடை.

புதுவையில் மிக்க செல்வப்பொருளும் கல்வியறிவும் ஒருங்கேபடைத்த ஸ்ரீமான் லூய் - சி. ஞானப்பிரகாச முதலியாரவர்கள், நமது கலைமகளுக்கு ரூபா 50 நன்கொடையளித்ததுமன்றி, கலைமகள் என்றும் நடைபெறல்வேண்டும் என்று கூறித் தாய்மொழியில் தமக்குள்ள அன்பின் பெருக்கையும் காட்டினார்கள். தமிழின் மாட்டு அவர்கட்குள்ள பற்றும், அவர்களது தரும சிந்தையும், உதார குணமும் யாவரும் எடுத்துப் பாராட்டத்தக்கனவே. அரும் புலவர்க்குப் பெரும் பொருள் வழங்கி மகிழும் அக்கனவான், தமிழ் வளர்ச்சி கருதிய நமது கலைமகளை அதனது தளர்ந்த நிலையில் ஆதரிக்க முன்வந்தது பற்றி, தமிழுலகமே அவர்கட்குக் கடமைப்பட்டதாகும்.

அன்புகூர்ந்து கலைமகளை ஆதரித்த நமது முதலியாரவர்கட்கு நமது மனப்பூர்வகமான நன்றியைச் செலுத்துவதுமன்றி, அவர்கள் பூரண சுகத்தோடு நீண்ட ஆயுள் பெற்று நிலவுமாறும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பத்திராதிபன்.

உ

ஸ்ரீவாணீ சகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ரு.	1917-ம் ஆடி ஜூலை மீ	இதழ் எ.

* யசோதரகாவியம்.

(வெண்டாமரை ச, இதழ் கக-கஉ, 263-ம் பக்கத் தொடர்ச்சி.)

யசோமதி யரசன், தன் தந்தையாகிய யசோதரனும் அவன் தாயாகிய சந்திரமதியும் பல பிறப்புக்களுட் சென்று சுழன்று வருந்தி அவர்களே இப்போழ்து தன் மகனாகவும் மகளாகவும் பிறந்திருக்கும் பெற்றியை நெஞ்சில் நினைந்து நொந்து தீயில் விழுந்த புழுப்போலத் தவிப்பதானான்.

"எந்தையு மெந்தை தாயு மெய்திய பிறவி தோறும்
வெந்துயர் விளைவு செய்த வினையினே னென்செய் கேனே
அந்தமி லுயிர்கண் மாய வலைபல செய்த நாளும்
வெந்துயர் நரகின் வீழ்க்கும் வினைசெய்தே னென்செய்கேனே.

அருளில்லாதவனாய் ஆருயிர்க் கழிவுசெய்து பொருளினும் இன்ப நுகர்ச்சியினும் மூழ்கி அறிவற்றுத் தீமைபுரிந்த யான் என்செய்

---

* 1916-ம் ஆண்டுமுதல் கலைமகளில் தொடர்ச்சியாக எழுதப்பட்டுவந்த இந்த யசோதரகாவியத்தை மறுபடியும் அச்சிடும் உரிமை இதன் ஆசிரியனுடையது.

வேன்! அருளுருவமாய அடிகள்! நும்மிடத்தும் தெளிவின்றித் தீங்கு நினைத்த சிறியனேன் என்செய்கேனே! மாவினாற் செய்த கோழியை வதைத்தார்க்கு இவ்வகைத் தீமை விளையுமாயின் அடியனேன் முடிவுஎன்கொல்! யான் உம தடைக்கலம், இனி ஏதும் அஞ்சிலேன், எளியேனைக் காத்தருள்க" என்று அரசன் சுதத்தமுனிவர் திருவடியில் வீழ்ந்து வணங்கினான்.

சுதத்தமுனிவர் யசோமதியை நோக்கி, "அரசனே! அஞ்சற்க; அறிவில்லாத காலத்தே அறியாது செய்த தீவினைகளெல்லாம் அறிவுண்டாயபோழ்து அகன்றுபோம்; நும்மவர்கள் அறியாது செய்த குற்றத்தினால் அவர்கள் நுகர்ந்த துன்பங்களை யறிந்துகொண்டாயன்றோ!

அருள்புரி மனத்த ராகி யாருயிர்க் கபய நல்கிப்
பொருள்கொலை களவு காமம் பொய்யொடு புறக்கணித்திட்
டிருள்புரி வினைகள் சேரா திறைவன தறத்தை யெய்தின்
மருள்செய வருவ துண்டோ வானவ ரின்ப மல்லால்"

என்று அருளிச்செய்தனர். அருளுதலும் சுதத்தமுனிவர் அடிகளில் முடிபட வணங்கிய அரசன், அருளால் உருகி நெஞ்சில் அறிவுண்டாக அறத்தை யறிந்தவனாகி விளங்கினான். வென்றவர் சரணடைந்தார் விளைப்பது வென்றியன்றோ!

பின்னர் யசோமதி மன்னன் தீவினையை யஞ்சிய நெஞ்சுடையவனாய், தன் மகனாகிய அபயருசியையும் மகளாகிய அபயமதியையும் வருவித்து, அவர்களது கடந்த பிறவிகளில் அவர்கட்குத் தான் அறியாது செய்த தீமைகளையெல்லாம் அறிவித்து, தெளிவிலன் முன்புசெய்த சிறுமைகள் பொறுக்கவென்றான். பிறகு கலியாணமித்திரன் என்னும் வணிகனைப் பார்த்து, "எனக்குப் புகலிடமாகிய சுதத்தமுனிவரோடு நின்னையும் எனக் கிறைவனாக நினைக்கின்றேன்" என்று நன்றி கூறி, அரசாட்சியில் வெறுப்புடையவனாய்த் தன் மைந்தன் அபயருசிக்கு முடி சூட்டுவித்து, தானும் தன்னுயிர்த் துணைவனாகிய வணிகனும் மற்றவரும் சுதத்தமுனிவரை வாழ்த்தி, துணிவினர் துறந்து மூவார் தொழுதெழ முருவுகொண்டார்.

153

தன் தந்தை துறவடைதலைக் கருதி முடி சூட்டிக்கொள்ள வுடன்பட்ட அபயருசியானவன், உலகத்தை ஒரு துகள்போல நினைத்து விருப்பற்றவனாதலின், தனது அரசுரிமையைத் தன் தம்பியாகிய யசோதரன்பால் ஒப்புவித்தான். தானும் தன் தங்கையும் சுதத்த முனிவர் திருவாய்மலர்ந்த சொற்களால் தமது பிறப்பின் வரலாற்றை யுணர்ந்த பின்னர், உலக வின்பத்தை நெஞ்சில் நஞ்சாகக் கருதி, மாதவன் சரணமாக வனமது துன்னினரே. வினைகளையும் அவற்றால் விளையும் பயன்களையும் வெறுத்துத் தவஞ்செய்ய விரும்பி, சுதத்தமுனிவர் அருளிச்செய்தபடி தமது ஆற்றலுக்கேற்றவாறு தவமிழைத்துக்கொண்டு அவரோடிருந்தார்கள்.

இச் சமயத்திற்றான் சுதத்தமுனிவர் தவக் குழாங்களோடு இந் நகர்ப் புறத்துச் சோலையில் வந்து தங்கி யிருந்தார். அன்று அங்கு எல்லோரும் உணவின்றிய நோன்பி லிருந்தார்கள். முனிவர் அபயருசியையும் அபயமதியையும் நோக்கி, "நீவிர் சிறு பருவத்தீர்; பசி பொறுக்கும் ஆற்றலுடையீரல்லீர்; ஆதலின் ஊர்க்குட் சென்று உணவு கொண்டு வருக" என்று கட்டளையிட்டபடி, அவ் விருவரும் உணவின்பொருட்டு ஊர்க்குட் சென்றனர்.

அரசனே! அப்படிச் சென்ற அவர்கள்தான் இப்போது உன் முன் நிற்கும் நாங்கள் இருவரும் என்று அறிந்து கொள்க. இதுவே யாமும் எமது சுற்றத்தவரும் அடைந்த பிறப்பின் வரலாறு. இதுவே முன்செய்த தீவினைகள் பின்னாளில் துன்புறுத்தும் வகை. இதுவே காமத்தினால் விளைந்த பயன். இறைவனது அறத்தின் வழிச் சென்றோர் பெருமையையும் இங்கறிந்தோமன்றோ! மாரித்தத்த மன்னனே! ஒரு மாவாற் செய்த கோழியின் வதையால் நேர்ந்த ஒரு சிறு கொலைப் பாவம் பல பிறவிகள் தோறும் சென்று வருத்துமானால், பல்லுயிர்களைப் பன்முறை வதை செய்த பாவத்தால் வரும் பெருந் துன்பங்கள் எவ்வகையாய் முடியுமோ என நெஞ்சி லிரக்கங்கொண்டு நாங்கள் வருந்துகின்றோம் — என்று அபயருசி கூறி முடித்தான்.

இவற்றை யெல்லாம் கேட்ட மாரிதத்தன் அபயருசியை நோக்கி, "ஐய! நீ அருளிச்செய்த நல்லுரையால், உயிர்க் கொலையினால் நரகில் நேரும் பலப்பல கோடித் துன்பங்களிலிருந்தும் விடுபட்டவனானேன்; யசோமதி யரசனது மைந்த! இது பொய்மையன்று; உனது சொல்லையே புணையாகக்கொண்டு மாதவமென்னும் ஒருகட லாட உறுதிகொண்டுள்ளேன்" என்றனன்.

இன்சொன் மாதரு மிளங்கிளைச் சுற்றமு மெரித்திர ளனவஞ்சிப்
பொன்செய் மாமுடி புதல்வருட் புட்பதந் தற்கிது பொறையென்றே
மின்செய் தாரவன் வெறுத்தன னரசியல் விடுத்தவ ருடன்போகி [ன்.
முன்சொன் மாமலர்ப் பொழிலினுண் முனிவரற் றொழுதுநன் முனியானா

இங்ஙனம் அரசியலை வெறுத்துத் தன் மகனாகிய புட்பதந்தனுக்கு முடி சூட்டுவித்து முற்கூறிய சுதத்த முனிவரைத் தொழுது முனியாகிய மாரிதத்தன், தவநெறியில் பன்னாள் வழுவாது நின்று, ஊனுடம்பினை யிவ்வுலகிடைவிடுத்து, வானுலகில் வானவர் குழாங்களுட்டலைமைபெற்று, தோய்யின் மாமுலைச் சுரவரர் மகளிர்தந் தோகுதியின் மகிழ்வுற்றான்.

அபயருசியும், அபயமதியும் சுதத்த முனிவர் அருள் பெற்று, சின தருமத்தை முற்று முணர்ந்து பன்னாள் தவநெறியில் நின்று முடிவில் இம் மண்ணுலகைத் துறந்து விண்ணுலகிற் சேர்ந்து விண்ணவராய் விளங்கினார்கள்.

அம்பொன் மாமுடி யலர்கதிர் குண்டல மருமணி திகழாரம்
செம்பொன் மாமணி தோள்வளை கடகங்கள் செறிகழன் முதலாய
நம்பு நாளொளி நகுகதிர்க் கலங்களி னலம்பொலிந் தழகார்ந்த
வம்பு வானிடு தனுவென வடிவுடை வானவ ரானாரே.

வானவர்கள் வந்து திசைதொறும் நின்று வணங்கி வாழ்த்தினார்கள். மலர்மாரி சொரியப்பெற்றன. இளங்காற்று இனிது வீசிற்று. துந்துபி யிசை மலிந்தது. அரமகளிர் ஆடினர் பாடினர். வந்து தேவியர் மன்மத வாளியின் மகிழ்ந்துடன் புடைசூழ்ந்தார். மாசகன்ற அழகிய இவர்கள் மேனியின் நறுமணம் ஒரு யோசனை தூரம் வீசியது. உடம்பினொளியும் ஒரு யோசனை யளவு பாவிற்று. முளைத்தெழும் கதிர்க்கடவுள் போன்ற இவர்கள், ஏசில் வானுலகிணையிலின் பத்தினி லிசைந்துட னியல்கின்றார்.

நூற்பயன்.

வெருவுறு வினைவலி விலக்கு கிற்பது
தருவது சுரகதி தந்து பின்னரும்
பொருவரு சிவகதி புணர கிற்பது
திருவற நெறியது செவ்வி காண்மினே.

ஐந்தாவது சருக்கம் முற்றிற்று.

பத்திராதிபன்.

தமிழ் மருத்துவப் பெட்டி.

(பதார்த்தகுண சிந்தாமணி.)

புதியன் மூலிக் குணம். (இதுவே புதியனு.)

அருசியொடு வாந்தி யக்கினி மந்தம்
குருதி யழுக்குமலக் கொட்டல் — இரியும்
துதியதன்று சோறிறங்குந் தொல்லுலகி னனும்
புதியனல் மூலி புகல்.

இ-ள். புதியனு என்னும் புதியன் மூலியால் அருசி, வாந்தி, மந்தாக்கினி, இரத்த தாதுவின் அழுக்கு, மலப்போக்கு இவைகள் நீங்கும்; போஜனம் செல்லுமென்க.

பண்ணைக்கீரையின் குணம்.

பண்ணையிளங் கீரையது பற்று மலமிளக்கும்
எண்ணுங் குடருக் கிதம்விளைக்கும் — பெண்ணேகேள்
சீதங் கரப்பான் சிரங்குபுண் மாற்றுவிக்கும்
கோதங் கிலையதனைக் கொள்.

இ-ள். பெண்ணே! குடலுக்கு நன்மையைத் தருகின்ற பண்ணைக் கீரையானது சீதம், கரப்பான், கிரந்தி, இரணம் இவைகளை நீக்கும்; மலத்தை யிளக்குமென்க.

முளைக்கீரையின் குணம்.

தளர்ந்தவர்க்கும் பாலருக்குந் தக்கவய தோர்க்கும்
இளங்கீரை நாவுக் கிதமாம் — கிளம்பு
சுவாசம் போக்குந் தொடர்பசியுண் டாக்கும்
பிரகாச மாயெடுத்துப் பேசு.

இ-ள். விருத்தர்களுக்கும், பாலர்களுக்கும், யௌவன பருவத்தவர்களுக்கும் நாவுக்கு இதத்தைத் தருகின்ற முளைக்கீரை, காசசுரத்தை நீக்கும்; பசியை யுண்டாக்குமென்க.

அறுகீரையின் குணம். (இதுவே அறைக்கீரை.)

காய்ச்சல்குளிர் சன்னி கபநோய் பலபிணிக்கும்
வாய்ச்ச சுறியாய் வழங்குங்காண் — வீச்சாய்க்
கறுவுமோ வாயுவினங் காமமிக வுண்டாம்
அறுகீரை யைத்தின் றறி.

இ-ள். பல பிணிக்கும் சத்ருரியான அறுகீரையினால் சுரம், நடுக்கல், சன்னிபாதம், கபரோகம், வாதநோய் இவை போம்; தாது விருத்தியாகும் என்க.

கலவைக்கீரையின் குணம்.

வாதபித்த வையத்தை மாற்று மலமறுக்கும்
ஓதுகுடல் வாதமதை யோட்டுங்காண் — போதின்
பலகலவைக் கோதாய்நற் பத்தியத்திற் கொவ்வும்
பலகலவைக் கீரையுண்டு பார்.

இ-ள். மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடையவளே! பலவகையுங் கலந்த கலவைக்கீரையானது வாத பித்த கப தோஷங்களையும், மலச்சிக்கலையும், குடல் வாதத்தையும் போக்கும்; பத்தியத்திற்காம் என்க.

நீர் ஆரைக்கீரையின் குணம். (இதுவே ஆரைக்கீரை.)

தின்று ருசிதரு நீராப் பயித்தியத்தைப்
பொன்றாத நீரிழிவைப் புண்ணாரை — யென்றுமித்த
வூரான்ரச் சாராம லோட்டிவிடு நாலிதழார்
நீராரைக் கீரையது நீ.

இ-ள். நல்ல சுவையும் நாலிதழுமுள்ள நீராரைக்கீரை, பித்த நோயையும், அதிமூத்திரத்தையும், இரத்தப் பிரமேகத்தையும் நீக்கும் என்க.

புளியாரைக்கீரையின் குணம்.

பித்த மயக்கமறும் பேருலகின் மானிடர்க்கு
நித்தமருள் வாதகப நேருமோ — மெத்தெனவே
மூலக் கிராணிவிடு மூல வுதிரமறும்
கோலப் புளியாரைக் கு.

இ-ள். புளியாரைக்கீரைக்கு, பித்தமயக்கம், நீமையை விளைக்கின்ற வாத கப மிசிரம், மூலவாயுக் கிராணி, இரத்த மூலம் இவைபோம் என்க.

கோழிக்கீரையின் குணம். (இதுவே பருப்புக்கீரை.)

சொறியுங் கரப்பானுந் தோற்றமேன் மேலும்
செறியுங் கிருமிமிகச் சேரும் — எறிகின்ற
ஆழிக்கி டானவிழி யாரணங்கே வையகத்திற்
கோழிக்கீ ரைக்குணத்தைக் கூறு.

இ-ள். கடலை நிகர்த்த கண்களையுடையவளே! கோழிக்கீரையால் சொறியும், கரப்பானும், கிருமியும் உண்டாம் என்க.

பிண்ணாக்குக்கீரையின் குணம்.

மலமிறங்கும் வாதமுடன் வன்கரப்ப னுண்டாம்
சலமிறங்கு மேகந் தணியும் — மலர்விழியாய்
உண்ணாக்குக் கின்பமா மோமெனல் வெட்டையெலாம்
பிண்ணாக்குக் கீரையுண்ட பேர்க்கு.

இ-ள். மலர்போன்ற விழியாளே! உருசியுள்ள பிண்ணாக்குக் கீரையால் மலமும், மூத்திரமும் தடையின்றி யிறங்கும்; வாததோஷமும், கரப்பானும் உண்டாகும்; *பிரமேக வெள்ளையும், அரித்திராமேகமும் போகுமென்க.

வெந்தயக்கீரையின் குணம்.

பொருமல்மந்தம் வாயுகபம் போராடு கின்ற
இருமலருசியிவை யேகும் — தரையில்
நீதி லுயர்நமனைச் சீறும் விழியணங்கே
கோதில்வெந்த யக்கீரை கொள்.

இ-ள். நீங்கிலுயர்ந்த காலனைச் சினக்கும் விழிகளையுடைய மாதே! வெந்தயக்கீரையால் வயிற்றுப்பசம், அக்கினிமந்தம், வாதகோபம், சிலேஷ்மதோஷம், காசம், அரோசகம் ஆகிய இவை நீங்கும் என்க.

கொத்துமல்லிக்கீரையின் குணம்.

கொத்துமல்லிக் கீரையுண்ணிற் கோர வரோசகம்போம்
பித்தமெல்லாம் வேருடனே பேருங்காண் — சத்துவமாம்
வெச்செனவே போகம் விளையுஞ் சுரந்தீரும்
கச்சுமுலை மாதேநீ காண்.

இ-ள். கச்சுமுலை மாதே! கொத்துமல்லிக்கீரையால் வாத அரோசகமும், பித்த வருக்கமும், பித்த சுரமும் போம்; வன்மையும், சுக்கிலமும் விருத்தியாம் என்க.

ஓர் மருத்துவன்.

கண்மணி கமலா.

நீதிபுகட்டும் ஓர் இனிய தமிழ் நாவல்.

(வெண்டாமரை ௫, இதழ் ௫-சு, 117-ம் பக்கத் தொடர்ச்சி.)

கந்தசாமி ஐயருக்கு இலாபம் கிடைப்பதற்கு முக்கிய காரணம் அவர் கிளப்பில் ஒரு பொருளு மிகுதிப்பட்டு அழிந்துபோகிறதில்லை. எஞ்சிய சாதம் பதார்த்தம் குழம்பு இரசம் அனைத்தையும் பின் சமைப்பவைகளுடன் சுவை மணம் மாறாத விதமாகக் கலந்துவிடும் தந்திரம் மீனாக்ஷிக்குப் பூரணமாகத் தெரியும். தன் வித்தையைத் தன் மகளுக்கும் போதித்துவருவாள்.

ஆதியில் கிளப்பில் குற்றேவல்செய்து வந்தவளும் சில வருஷங்களுக்கு முந்தி வேலையினின்று துறத்திவிடப்பட்டவளுமாகிய மாணிக்கமென்பவள் முன் சாப்பிட்டுப் போனவர்கள் இலையில் மிகுதி நிற்பதைப் பின் வருபவர்களுக்குத் தந்திரமாகப் படைப்பதும் இலை கிராக்கியான காலத்தில் சாப்பிட்டுவிட்ட இலைகளையே இன்னுமொருதரம் கழுவச் செய்து உபயோகிப்பதும் மீனாக்ஷியம்மைக்கு வழக்கமென்று கூறி வருவாள்.

இதனுண்மை யெவ்வாறாயினும் தற்காலம் கந்தசாமி ஐயரிடத்தில் 5000 ரூபாய்க்கு அதிகமாக ரொக்க வைப்பு இருக்கிறது. தங்கள் புத்திரியைத் தக்க வரனுக்கு விவாகம் செய்துவைக்க வேண்டுமென்பது தான் ஐயருக்கும் அவர் அகமுடையாளுக்கும் உள்ள பெரிய கவலை. சிவகாமிக்கு எற்கனவே பதின்மூன்று வயது ஆய்விட்டது. இன்றைக்கோ நாளைக்கோ பூத்துவிட்டால் ஆசாரக்கேடாய்விடுமே யென்கிற அச்சம் பெற்றோர்கள் மனதைப் புண்ணாக்கிக்கொண்டுவந்தது. இக் கன்னிகைக்கு வரன் தேடுவதற்காக மூன்று நாலு வருடமாக கொண்டி

சுப்பையன் சென்ற ஊர்களுக்கும் பட்ட பிரயாசைக்கும் கணக்கில்லை. அவனுக்குத் தட்டில்லாமல் ஜிளப்பில் நடந்த விருந்துகளுக்கும் உபசாரணைகளுக்கும் கூடக் கணக்கில்லை. தாகன் திட்டம் செய்துகொண்டு வந்த இரண்டு மூன்று சம்பந்தங்கள் கந்தசாமி ஐயருக்குப் பிடிக்கவேயில்லை. வரதக்ஷிணையென்று ஒன்றும் கொடுக்கமாட்டேன், என்று அவர் பிடிவாதம் செய்ததே கைகூடிய சம்பந்தங்களுக்கெல்லாம் தடையாய் நின்றது. வரதக்ஷிணையென்றால் மந்தையில் பொலி கடாவுக்குக் கொடுக்கிறார்களே கூலி அதுவா என்பார். காசுக்கு வெறித்து வரதக்ஷிணையென்று திரியும் பயல்கள் ஒருவனும் வேண்டா. கொஞ்சம் அந்தஸ்துள்ளவனக இருக்கவேண்டுமென்றும் தான் தன் பெண்ணுக்கு ஆயிரம் வராகனுக்கு அதிகமாகச் சீதனம் கொடுக்கத் தீர்மானித்திருப்பதாகவும் தாகனிடத்தில் தம் கருத்தை விபரமாகத் தெரிவித்திருந்தார்.

கடைசியாக, சுப்பையன் திருவதிகைச் சதாசிவ சாஸ்திரிகளைக் குறித்துக் கந்தசாமி ஐயரிடம் பேசியபோது, இவர் இது விஷயத்தில் தமக்குப் பூரண சம்மதமென்றும், அந்தச் சம்பந்தத்தை யெப்படியாவது முடித்துவைத்தால் சுப்பையனுக்கு நூறு வராகன் தரகு கொடுப்பதுடன் ஒரு ஜோடி விசித்திர சரிகை வேஷ்டியும் இனும் கொடுப்பதாக வாக்களித்தார்.

இந்த இலாபத்தைக் கருதியே நொண்டி சுப்பையன் சாஸ்திரிகளிடத்தில் சிஷ்யனைப்போல் நடித்துக்கொண்டு காரியத்தை முடிப்பதற்கு நல்ல சமயம் நோக்கிக்கொண்டிருந்தான். ஒரு நாள் சாஸ்திரிகள் ஏகாந்தமாயும் சாவகாசமாயும் இருக்கும்போது, சுப்பையன் அவருடன் பின்வருமாறு சம்பாஷிக்கத் தொடங்கினன்.

சுப்பையன் :— வெகுகாலமாக அடியேன் தங்களிடத்தில் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள விருப்பமுற்றிருக்கின்றேன்.

சதாசிவ சாஸ்திரிகள் :— விரும்பிய காரியத்தை வெளியிடுகிறது தானே, அதற்கென்ன தடை?

சு. திருவதிகைச் சாஸ்திரிகள் வம்சம் தென்னாட்டில் தலைமுறை தலைமுறையாகச் சிவ சமயத்திற்கு ஒரு மூலஸ்தம்பம்போல விளங்கிற்றென்று என் பாட்டனார் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். மேலும் முன்னொருகாலத்தில் டில்லிமாநகரினின்று அக்பர் சக்கரவர்த்தி இந்து தேச முழுவதையும் தம் தனிக்குடையின் கீழ் ஆண்டுவந்தபோது, தெக்காணிய நவாப்புக்களால் சிவ சமயத்திற்குப் பல இடையூறுகள் நேர்ந்த

தைக் கண்ட தங்கள் முன்னோரி லொருவர் சக்கரவர்த்தியின் சமஸ்தானத்தை யடைந்து, அம் மகம்மதிய அரசனுக்குச் சைவமத உறுதிகளை நன்கு விளக்கிக் காட்டி, பட்டாணிகளுக்கு அதன்மீதுள்ள துவேஷத்தை நீக்கி நம் மதத்தை இரக்ஷித்தாரென்றும் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

ச. அக்பர் சக்கரவர்த்தியின் சமஸ்தானத்திற்குச் சென்றவர் எனக்கு ஐந்தாம் பாட்டனாகிய திருவதிகைச் சச்சிதாநந்த சாஸ்திரிகள்தானென்று புன்னகை பூத்த முகத்துடன் சதாசிவ சாஸ்திரிகள் கூறினார்.

எவ்வளவு விவேகிகளா யிருப்பினும் முகஸ்துதிக்கு அகமகிழாத மனிதர்கள் உலகி லுண்டோ!

சு. இத்துணைக் கீர்த்திபெற்ற நற்குலத்திற்கு அருமருந்தென்ன இப்போதைக் கிருப்பவர் தாங்கள் ஒருவர்தானன்றோ. தங்களுக்குப் பிறகு இத்திவ்விய வம்சம் அழிந்துபோகுமே யென்று எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் என் மனம் புண்ணுகின்றது. சில நாட்களுக்கு முன்னர் நளிர்சுரம் தங்களை வாதித்தபோது இதையே சிந்தித்துக்கொண்டு ஊணுறக்கமின்றி யிருந்தேன். பின் எது வரினும் வரட்டுமென்று தைரியம் கொண்டு குலவிருத்திக்காகத் தாங்கள் வதுவைக் குடன்படுமாறு இறைஞ்சி மன்றாடத் துணிந்துவந்தேன்.

ச. எனக்கும் இது விஷயத்தில் சில நாளாகச் சிந்தனையுண்டு; ஆனால் பத்தாவுக்கேற்ற பதிவிரதை கிடைத்தாலல்லவோ இல்லறம் நல்லறமாகும்.

நற்குலத்துதித்தவளாகவும், பெற்றதேகொண்டு உவப்பவளாகவும், கணவனைக் கடவுளாகக் கொள்பவளாகவும், நற்குண நற்செய்கைகட்கெல்லாம் தாயகம் போல்பவளாகவும் இருக்கும் கன்னிகை வாய்த்தால் மாத்திரமே மனையறமென்னும் புணையைப் பற்றி மோக்ஷக்கரை யேற இயலும். தீர்க்காலோசனையின்றித் தகாதவளை மணப்பது பாம்பின் புற்றில் தானே வலியக் கைவிட்டுப் பின்பு துன்புறுவதுபோன்ற மதியீனமாகும்.

சு. இவை யெல்லாம் ஆய்ந்தோர்ந்து பார்த்த பின்னரே இது விஷயமாகத் தங்களிடத்தில் பேசத் துணிந்தேன். பிரமதேவனே தங்களுக்கென்று படைத்து வைத்தாலொத்த ஒரு கன்னிகை யிருக்கின்றாள்.

திருப்பாதிரிப்புலியூரென்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் உத்தம பிராமண குலத்தில் கந்தசாமி ஐயர் என்ற நாமதேயமுடைய வேதியர் ஒருவர் இருக்கின்றார். இவர் குல தர்மமெல்லாம் ஒருருவெனத் திரண்

டுதித்தவள் ஷெடியார் புத்திரியாகிய சிவகாமியம்மையே. இக் கன்னிகையின் ரூபலாவண்யத்தையும் மாசற்றொளிரும் குண சீலத்தையும் முழு மூடனான யானோ எடுத்துரைக்க வல்லவன்!

அழகில் இரதி தேவியும் திலோத்தமையும் இவட்கு ஈடல்லர். கல்வியில் கலைமகள் போன்றவள். பொறுமையில் பூமிதேவி யென்னலாம். சாந்தத்தில் ஜானகியை யொத்தவள். தயையில் பார்வதியை நிகர்த்தவள்.

அருந்ததியும் கைதொழுதேத்தும் கற்புடையவள்.

காட்டுத்தீயைக் குளிரச்செய்த சந்திரமதியோ, தன்னை யிச்சித்த வேடனை யெரித்த தமயந்தியோ, தன் கற்பைப் பரீக்ஷிக்க வந்த திரிமூர்த்திகளையும் குழந்தைகளாக்கி ஸ்தனபானம் பண்ணுவித்த அனுசூயையோ, எமன் கொண்டுபோன தன் நாயகனை வாதாடி மீட்ட சாவித்திரியோ, தனக்கு வைதவ்யம் வராதபடிக்குப் பொழுது விடியாதிருக்கச் செய்த நளாயினியோ, கற்பில் சிவகாமியம்மையை எவர்க்கு உவமானமாகக் கூறுவதென அறிகிலேன். இவ் வுத்தமோத்தமியே தங்களுக்கு இல்லக் கிழத்தியாகத் தக்கவள். தங்கள் சித்ததைக் கிருபை கூர்ந்து வெளியிட்டால் இவ் விவாகத்தை முடித்துவைக்கும் உறுதி எனக் குண்டு.

ச. கந்தசாமி ஐய ரென்பவர் குலாசார தர்மத்தில் சற்றும் பிறழாத உத்தம பிராமணர் தானே? அவருக்குத் தொழி லென்ன?

சு. அவர் விரத அநுட்டானங்க ளொன்றும் தவறா வைதிக பிராமணர். தொழிலா? (சற்று ஆலோசித்து) அவர் தொழிலா? அன்னசத்திரப் பரிபாலகர்.

சீ. அன்னசத்திரப் பரிபாலகர் என்றால் தனிகரும் மகா தர்ம சிந்தையுடையவருமாகவன்றோ இருக்கவேண்டும்!

சு. அதற்கு ஐய மென்ன? நாள் தோறும் நூற்றுக் கணக்கான ஜனங்கள் கந்தசாமி ஐயர் கைச் சாதத்தை யுண்டுவருகின்றார்கள்.

இவ்வாறு சம்பாஷித்த பிறகு கந்தசாமி ஐயர் புத்திரியை விவாகம் செய்துகொள்வது தமக்குச் சர்வ சம்மதமென்றும், தம் சாதகத்தைக் கொடுத்துப் பெண் சாதகத்தை யெடுத் தனுப்பும்படி சொல்லிவிட்டு, கலியாணத்தை முன்னிட்ட எற்பாடுகளெல்லாம் சுப்பையன் செய்து முடிக்கிறதென்றும், மத்தியில் கலக மொன்றும் நேரிடாதபடி முகூர்த்த தினம் வரையில் இச் சம்பந்த விஷயம் இரகசியமாகவே யிருக்கவேண்

டியதென்றும், மண மகோற்சவம் திருவதிகையிலேயே நடக்கிறதென்றும் இருவரும் கலந்து பேசித் தீர்மானித்துக்கொண்டார்கள். பிறகு சுப்பையன் சாஸ்திரிகளிடத்தில் உறுதி வாக்குப் பெற்றுக்கொண்டு ஜட்காவண்டி யேறித் திருப்பாதிரிப்புலியூர் சென்றான்.

வண்டியை விட்டு இறங்கிக் கிளப்புக்குள் நுழைந்தான். அவன் தலையைக் கண்டவுடன் கந்தசாமி ஐயரும் அவர் அகமுடையாளும் சகல வேலைகளையும் விட்டுவிட்டு எதிரோடி வந்து வரவேண்டும் வரவேண்டு மென்று மிக உபசரித்தார்கள். நல்ல சமாசாரந்தானா? என்றார் ஐயர். போனகாரியம் காயோ பழமோ? என்றாள் மீனாக்ஷியம்மை. — அப்பப்பா! போதும் போதும் உங்களால் நான் பட்ட கஷ்டம். எழுபிறப்புக்கும் போதும். சிட்டுக்குருவித் தலையில் பனங்காயை வைத்தாற்போல் இத்தனை பிரமாதமான காரியத்தை என் தலைமீது சுமத்தினால் நான் அதை நன் முடிவுக்குக் கொண்டுவருவதற்காக எடுத்துக்கொண்ட பிரயத்தனத்திற்கும் பட்ட சிரமத்திற்கும் அத்து ஏது அளவேது? அதெல்லா மிருக்கட்டும், பின் விவரமாய்ச் சொல்கிறேன். இப்போது பசியினாலும் களையினாலும் காதடைக்கிறது. கண் இருண்டுபோகின்றது. குளிக்கக் கொஞ்சம் வெந்நீரும், போஜனமும் சீக்கிரத்தில் ஆயத்தமாகட்டும். — ஐயரவாள்! வண்டிக்காரனுக்குச் சத்தம் ரூபாய் இரண்டு கொடுத்தனுப்பிவிடவேண்டும் என்றான் சுப்பையன். அவன் சொல்லி முடிப்பதற்குள் கந்தசாமி ஐயர் விரைந்து சென்று வண்டிக்காரனுக்குச் சத்தமும் இனாம் நாலணாவும் கொடுத்தனுப்பிவிட்டார். மீனாக்ஷியம்மை "அடி சிவகாமு! மாமா குளிப்பதற்குப் பெரிய அண்டாவில் ஜலம் கொட்டிச் சூடாக்கு" என்று தன் மகளை யேவி விட்டு, சுப்பையன் போஜனத்திற்குப் புத்துருக்கு நெய் காய்ச்சுவதற்கும் அப்பளம் வற்றல்கள் வறுப்பதற்கும் மடைப்பள்ளிக்கு ஓடினாள். ஒரு நாழிகைக்குள் நொண்டி சுப்பையன் வெந்நீரில் சுக ஸ்நானம் செய்துவிட்டு மீனாக்ஷியம்மை வருந்தி வருந்தி யிட்ட விருந்தை விலாப்புடைக்க அருந்திச் சந்தனத்தைத் தேக முழுதும் அப்பிக்கொண்டு பரிமள தாம்பூலம் தரித்துக்கொண்டு கந்தசாமி ஐயருக்கும் அவர் மனைவிக்கும் தான் முடித்துவந்த காரியத்தைப் பின்வருமாறு விவரித்துக் கூறினான். —

(வரும்.)

தம்பி – புருஷோத்தமன்.

ஓர் நன்றியறிதல்.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."

என்னும் செந்நாப்போதார் திருவாக்கிற் கிலக்கியமாயிலகும் நம் செந்தமிழ்ப் புலவர்கள்முன், நங் கலைமகள் வாயிலாக,

"மண்விராம்புனல்..................யெழுந்தன்றே."

என்னும் திருவானைக்காப் புராணச் செய்யுட்கும்,

"ஞானங் கொண்டு நணுகுஞ் சிவபதம்
ஊனங் கொண்ட கருமத் துறுவது
வானங் கொண்டு வளர்த்தல் புகையது
மானங் கொண்டு வளர்த்தலை யொக்குமால்."

என்னும் பிரபுலிங்கலீலைச்செய்யுட்கும்பொருள் விளக்கஞ்செய்யவேண்டுமெனயான் செய்துகொண்ட வேண்டுகோளை யங்கீகரித்து, "மண்விராம்புனல்............யெழுந்தன்றே" என்ற செய்யுட்கு மாத்திரம் நம் கலைமகள் வெண்டாமரை ௫, இதழ் ௫-௬, பக்கம் 112-ல் மிக நன்றாகப் பொருள்விளக்கஞ் செய்துதவிய ஸ்ரீமாந் "ஞானவான்சேய்" என்னும் புலவர் சிகாமணிக்கு என்போன்றார் யாவரும் மிக நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருத்தலை யான் வந்தனத்துடன் அறிவிக்கலானேன்.

இத்தகைய புலவர் சிகாமணிகளே உலகின்புறக் கற்றாராவர். ஆகலின் என்னால் பொருள்விளக்கம் பெறும் பொருட்டு அறிவிக்கப்பட்ட மேற்கண்ட பிரபுலிங்கலீலைச் செய்யுட்கும் புலவராற் போற்றப்படும் பொருள்விளக்கஞ் செய்யுமாறு வேண்டுகின்றேன். சுபம்!

வித்தை விரும்பி.

சுகாதாரம்.

(ஸ்ரீமான் பண்டிட் S. S. ஆநந்தம் பிள்ளையவர்கள்.)

தேகமும் மனமும் நல்ல நிலைமையிலிருப்பது சுகமாம். இரண்டையுங் கெடுப்பது நோயே.

வேண்டிய அளவு காலமறிந்துண்ணுதலும், மிதமீறின உணவும், உடலுக் கொத்துக்கொள்ளாததும் சீரணிக்காததுமான பதார்த்தங்களைப்

புசிப்பதுந்தான் நம்மவர்கள் பெரும்பாலும் நோயாளராவதற்குக் காரணம். ஆகாரப் பையில் ஜீரணமாகாத பதார்த்தங்கள் தங்கிப் புளிப்பதால் இரத்தம் அசுத்தமடைகிறது. தேகமும் மனமும் நலிவடைந்து பாவ புண்ணியங்களைப் பகுத்தறியாத நிலைக்கு வந்துவிடுகின்றன. காலரா என்னும் வாந்திபேதி, பிளேக்கு முதலிய கொள்ளைநோய்களா லேற்படும் அகால மரணங்களும், சாஸ்திர முறையாகத் தேகத்தைக் காத்துக்கொள்ளாததனால் விருத்தியடைகின்றன. ஆதலால் நோய்கள் விசேஷமாக நாகரிகமற்றவர்களை அதிகமாய்ப் பீடிக்கிறது.

நாம் உண்ட உணவு முழுதும் ஜீரணமானால் நல்ல இரத்த முண்டாகி உடம்பு சுக நிலையி லிருக்கச்செய்கிறது. சுமை ஏற்றின எருது படுத்துக்கொள்வதைப்போல அதிக உணவை உண்டால் ஜீரணக்கருவி சுமக்க வலிவின்றித் தன் தொழிலைச் செய்ய முடியாமல் சோர்ந்து சும்மா இருந்துவிடுகிறது. அவ்விதம் உணவு புளித்து அழுகி நஞ்சாகிக் கிருமிகளுக் கிடந் தந்து ஜீரண உறுப்பையும் இரத்தத்தையும் உள்ளூறக் கெடுத்து அநேக நோய்களுக்கு இடந் தருகிறது.

உலகத்திலுள்ள மனிதர்களுக்குள் சாதாரண உணவு உண்டவர்களும், ஒரு நாளைக் கிரண்டுவேளை உண்பவர்களுமே நோயில்லாமல் நீண்டகாலம் வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது. தற்காலம் மனிதர்கள் அதிலும் நகரங்களில் வசிக்கும் செல்வர்கள் நாவுக் கினிமையையும், மூக்குக்கு வாசனையையுமட்டும் கவனித்து அடிக்கடி உண்ணும் வழக்கத்தில் அதிகரித்து வருகிறார்கள். நகரங்களில் நாளுக்கு நாள் ஜன நெருக்கம் அதிகரிப்பதால் போதுமான நல்ல காற்று இல்லை. தனிகர்கள் நடந்து பக்கத்துத் தெருவுக்குப் போவதுகூட இல்லை. எப்போதும் வாகனாதிகளில் போவதனால் தேகம் இரத்த வோட்டம் குறையப்பெற்றுக் கொழுப்புப் பிடித்துப் பருத்துப் பலவீனமடைந்துபோகிறது. ஜீரணசக்தியும் குறைந்துவிடுகின்றது. உலகில் இயந்திரசக்திமட்டும் அதிகரித்துவருகிறது. ஜீவயந்திரங்களாகிய மனிதர்களுக்குப் பலவீனம், நோய், சாக்காடு முதலிய கெடுதிகள் அதிகரிக்கின்றன.

மரணத்துக்குப் பயப்படும் மனிதன் மரணவிதைகளையே தினம் தேகத்தில் சேர்த்துப் பயிராக்கிவருவது மிகவும் பரிதபிக்கத்தக்கது. கருப்பையில் கலந்த நோய் நீங்க, மத்தியில் தேகத்தில் நோய் சேராமல் தடுத்துக்கொள்பவருக்கு நூறு வயதுக்குள் பிணி, மூப்பு, சாக்காடு ஏற்படாவென்பது நிச்சயம்.

தேக தத்துவம் தெரியாதவர்களுக்கும் மனதை அடக்கி ஆள முடியாதவர்களுக்கும் வயிற்றைப் புழுக்களால் நிரப்பத் தெருக்களில்

அடிக்கொரு காப்பி ஓட்டல்களும், மிட்டாய்க் கடைகளும், சாராயக் கடைகளும், பலகாரக் கடைகளும் ஏற்பட்டிருக்கின்றன. கடவுள் உணவுப் பொருள்களைப் படைக்க, இயமன் சமையற்காரர்களைப் படைப்பித்தான்போலும். ஓட்டல்களுக்குப் போகாதிருந்தால் தேகம் கெடாமலிருப்பதோடு பணச்செலவுமில்லை.

சுத்தம் தெய்வத் தன்மையுடையது. மனிதர்களில் ஜாதியினால் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் தவறான பழக்கத்தைக்கொண்டு ஒருவர் மேல் ஒருவர் படாதிருத்தலும், உண்ணாமல் உறவாடாமலிருத்தலும், சோப்பால் உடம்பைக் கழுவுதலும், வண்ணான் கஞ்சி தோய்த்த சலவைத் துணிகளை யுடுத்தலும் சுத்தமல்ல. சுத்தமாவது புறச் சுத்தம், அகச் சுத்தம் என இருவகைப்படும். அகச் சுத்தத்தை விசேஷமாகச் சிலர் சொன்னாலும், புறச் சுத்தமாகிய தேக சுத்தமே மனச்சுத்தத்திற்கு அஸ்திவாரமாக நிற்கிறது. தேக சுத்தம் மனோ சுத்தத்திற்காகத்தான் மதாச்சாரியார்கள் அநேக கர்மாநுஷ்டான விதிகளை ஏற்படுத்தினார்கள்

மனித தேகம் பிறந்தது முதல் பூரண தேகம் ஆகும் வரையில் சுவாசித்தல், உண்ணல், உறங்கல், நினைத்தல், செய்தல் முதலிய இன்றியமையாக் காரியங்களைச் செய்கின்றன. மேற்படி காரியங்கள் எவ்வளவு ஒழுங்காக ஆரம்பமுதல் நடைபெற்றுவருகின்றதோ அவைகட்குத் தக்கபடி மனிதன் தனக்கும் பிறருக்கும் உபயோகமுள்ளவனாகிறான். ஆதலால் மனித தேகத்திற்கு ஆதிமுதல் அந்தம்வரை இடைவிடாது நடைபெற்றுவருவதும் அவசியமானதும் முதற்றொழிலுமாகிய சுவாசித்தல் என்பதைக் குறித்துச் சிறிது கவனிப்போம். மனிதன் சுவாசிக்கும் காற்று எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்? எப்படிச் சுவாசிக்கவேண்டும்? என்பவைகளே முதலில் கவனிக்கத் தக்கவை. ஆனாலும் இதற்கு நம்முடைய பிரயத்தனம் ஒன்றும் வேண்டியதில்லை என்றாலும் எந்த நேரத்திலும் சர்வ ஜாக்கிரதையாயிருக்கவேண்டியதும் கவனிக்கவேண்டியதும் இது ஒன்றில் தான்.

சுத்தமான வெளிக்காற்றை இயன்றமட்டும் வாயைத் திறவாமல் மூக்கினாலேயே நிமிர்ந்த நிலையிலிருந்துகொண்டே சுவாசிக்கவேண்டும். அவசரமாய்ச் சுவாசிக்காமல் முடிந்தவரையில் மூச்சை மெதுவாக விடவேண்டும். குளிர் காலத்தில் தன் உடம்பைக் கம்பளி முதலிய போர்வைகளால் போர்த்துக்கொள்ள வேண்டுமேயன்றி, தானிருக்கும் அறையில் காற்று வாராமல் ஜன்னல்களை முற்றிலும் அடைத்துவிடுதலும், படுக்கை அறைகளில் விளக்கெரியச்செய்தலும், ஒருவரிருவர் இருக்கக்கூடிய

இடத்தில் பலபேர் இருக்கவாவது படுத்துறங்கவாவது விடுதலும், தலையணையை அதிக உயரமாய் வைத்துக்கொள்ளுதலும், கடவுளால் அருளிய நல்ல காற்றை நஞ்சாக்கித் தனக்கும் பிறருக்கும் கேட்டை விளைவிக்கும் சுருட்டு முதலிய புகைகள் சூழச்செய்துள்ள இடத்தில் இருத்தலும், இரவு முழுதும் ஒரே படுக்கையில் இருவர் உறங்குவதும், குழந்தைகளை இரவு முழுதும் மார்போடணைத்து உறங்கவைப்பதும், மனிதர்களுடன் பேசும்போது ஒன்றரை கஜ தூரத்துக்குச் சமீபத்தில் (நகத்தடி தூரம்) நெருங்கிப் பேசுவதும் சுகக் கெடுதியான காரியங்கள். அநேகர் வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொண்டாலும் வீட்டுக்கு வெளிப்புறம் வீட்டைச் சுற்றி மிகவும் அசுத்தமாக வைத்திருக்கிறார்கள். நாம் வீட்டிற்குள் சுவாசிக்கும் காற்று வீட்டிற்கு வெளியிலிருந்துவரும் காற்றாகையினால் வீட்டிற்கு வெளிப்பக்கம் சுத்தமாக இருந்தாலன்றி வீட்டிற்குள் நல்ல காற்று வருவதற்கேதுவில்லை. வானத்திலிருந்து பொழியும் மழைநீர் சுத்தமானதாயிருந்து வீழ்ந்து நிலத்தின் தன்மையை யடைவதுபோல் காற்றும் நிலத்திலுள்ள பதார்த்தங்களின் குணத்தை அடைகிறது. பரிமள வர்க்கங்களை (முகர்ந்து) காற்றில் கலந்து சுவாசித்து இன்பமடைகிறவர்கள் தாம் வசிக்கும் இடங்களில் கெட்ட காற்று உண்டாக்கக்கூடிய ஏதுக்களை நீக்குவதில் கவலையில்லாமலிருப்பது மிக ஆச்சரியமாகிறது. கெட்ட காற்று நிறைந்துள்ள இடத்தில் (ஓர் செண்ட்) வாசனைத் திரவியத்தைக் கைத்துணியில் தடவி முகர்வதனால் அங்குள்ள கெட்ட காற்றைத் தடுத்ததாகச் சிலர் எண்ணுவது தவறு. பரிமளத்தைவிட நல்ல காற்றே தேகாரோக்கியத்துக்கு முக்கியமானது.

(திராவிடன்)

புதுவை ஆனந்தாசிரம சாதுமகாசங்கத்தின் 3-வது வருட மகோற்சவம்.

மேலாஞ் சதுட்ட சாதனங்கள் மேவி நின்ற பேர்க்குரைக்கின்
மேலாம் அதுகா மென்த்திடமாய் விளங்கு மவையில் லாதவர்க்கு
மேலாம் பரமன் மான்மழுவாய் விளங்கி யுரைத்தும் விளங்காது
மேலாஞ் சதுட்ட யங்கள்வர மேவ வேண்டுஞ் சாதுசங்கம்.

பிங்கள ஸூ ஆடி மீ உகு-ம் உ வியாழக்கிழமை முதல் உஅ-ம் உ ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணி பரியந்தம் ஷ மகோற்சவமானது புதுவை ஸ்ரீ பாலைய சுவாமிகள் மடத்தில் நடந்தேறியது. வெள்ளி,

சனி, ஞாயிறு இம் மூன்று தினங்களிலும் காலை மாலைகளில் ஸ்ரீமத் கோ. வடிவேலு செட்டியார், ஸ்ரீமத் ஆ. வே. முத்தைய முதலியார், ஸ்ரீமத் துரைசாமி முதலியார், ஸ்ரீமத் ஜெகந்நாத நாயுடு, ஸ்ரீமத் ஆதிமூல சுவாமிகள், ஸ்ரீமத் கோவூர் துரைசாமிப் பிள்ளை, ஸ்ரீமத் சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலர் என்னும் சாதுக்களால் முறையே வாய்மை, அருள், சுந்தரர் சரித்திர தத்துவம், ஞானயோகம், பழக்கம், ஆசை, சாது சங்க மகிமை, இல்லறம், அன்பு, நமது சமயம், மஹாராஜா துறவு, ஸ்ரீ ராமரும் கம்பரும் என்னும் விஷயங்கள் உபந்நியாசஞ் செய்யப்பட்டன.

இச் சங்கத்தின் சற்குரு மூர்த்திகளாகிய ஸ்ரீமத் கரபாத்ர சிவப்பிரகாச சுவாமிகள், வெள்ளிக்கிழமை காலையில் புதுவைக்கடுத்த வில்லியனூரில் இறங்கி ஷெடியூர் அம்மணியம்மாள் சத்திரத்தின் தருமகர்த்தராகிய ஸ்ரீமான் வைத்திலிங்கம் பிள்ளை யவர்களால் நன்கு வரவேற்கப்பட்டு ஷெ. சத்திரத்தில் எழுந்தருளினர். அன்று பகல் நூற்றுக் கணக்கான சாதுக்களுக்கு அன்ன மளிக்கப்பட்டது. ஆயிரக் கணக்கான பிரஜைகள் சுவாமிகளைச் சேவித்துக் கிருதார்த்தர்களானார்கள். மோக்ஷத்தின் முக்கிய சாதனமான இச் சத் கைங்கரியத்தை முன்னின்று முடித்த ஸ்ரீமான் வைத்திலிங்கம் பிள்ளை யவர்களின் பல ஜன்ம புண்ணியத்தின் பலனைப் பலரும் புகழ்ந்து மகிழ்ந்தனர்.

வில்லியனூரில் சுவாமிகளின் விஸ்ராந்தி முடிந்ததும், அன்று மாலை நான்கு மணிக்குப் புதுவைமாநகருக்குப் புறப்பட்டு ஸ்ரீமான் திருமுடி - சின்னசாமி செட்டியார் சத்திரத்தி லிறங்கி அங்கிருந்து சாதுக்கள் புடைசூழ நகர்வலம் வந்து சபாலயத்திற் கெழுந்தருளிச் சபையாரின் வரவேற்பு வணக்கத்தை யேற்றுச் சகலருக்கும் அனுக்கிரகஞ் செய்து சாது சங்க மகோற்சவத்தைச் சர்வ மங்களமாய் நடத்திவைத்து, சோமவாரம் இரவு ஒன்பது மணிச்குச் சென்னை ஆனந்தாசிரமத்திற்குப் பிரயாண மெய்தினர்.

சத்கருமங்களும், சாதன சதுஷ்டயமும், சற்குரு சேவையும், சிரவணாதிகளும், திடஞானமும், தானே தானுஞ் சீவன் முக்தியும் சாது சங்கம் ஒன்றினாலேயே பெறலாமென்று சுருதி யுத்தி யனுபவ மிருப்பதால், இத்தகைய சாது சங்கங்கள் இவ் வுலக முழுதும் வியாபிக்கும்படி எம்பெருமானை இடைவிடாது துதிசெய்வோமாக.

நடந்தது நவில்வோன்.

படிக்காசுப்புலவர் சரிதம்.

(வெண்டாமரை ரு, இதழ் ௫-கூ. 112-ம் பக்கத் தொடர்ச்சி.)

இங்ஙனம் சிலகாலம் படிக்காசுப்புலவர் இராமநாதபுரம் அரசர் அபிமானப் புலவராய்ச் சிறந்து அதன் பக்கத்துள்ள கீழைக்கரையில் ஔரங்கசீப் முதலிய மகம்மதிய அரசர் மெச்ச வாழ்ந்த "சீதக்காதி" யென்று பெயர் சிறந்த **பெரியதம்பி மரைக்காயர்** என்னும் பெருங் கொடைச் செல்வரைக் காண அவாக்கொண்டு அரசர் அநுமதி பெற்றுச் சேதுபதி தந்த சிவிகைமீ தூர்ந்து பல விருது வரிசைகளுடன் "சிவ கங்கை" வழியாகச் செல்லுகையில், அவ்வூர் அரசர் முத்துவடுக நாதேந்த்ரனின் பந்துவான "திருமலைத்தேவர்" இவரது ஆரவாரத்தைக் கண்டு அழுக்காறு கொண்டு தமது பரிசனர்களை விடுத்துப் புலவரை யழைத்துத் தமது அரண்மனைக் கண்ணுள்ள கிளிக்கூட்டுச் சிறையிலே அடைத்துவைக்க, புலவர் சினந்து வருந்தினாரெனினும்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்" (திருக்குறள்)

என்பதைச் சிந்தித்துத் தெளிந்து,

"நாட்டிற் சிறந்த திருமலை யாதுங்க நாகரிகா
காட்டில் வனத்திற் றிரிந்துழ லாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காச னென்னுமோர் பைங்கிளியைக்
கூட்டி லடைத்துவைத் தாயிரை தாவென்று கூப்பிட்டவே."

என்னுஞ் செய்யுளைப் பாடி அவரை வசப்படுத்திச் சிறை நீங்கிப் பரிசு பெற்று அங்கு நின்று நீங்கிக் கீழக்கரை சேர்ந்து "சீதக்காதி" பிரபுவைக் கண்டு,

"நேசித்து வந்த கவிராசர் தங்கட்கு நித்தநித்தம்
பூசிக்கு நின்கைப் பொருளொன்று மேமற்றைப் புல்லர்பொருள்
வேசிக்குஞ் சந்து நடப்பார்க்கும் வேசிக்கு வேலைசெயும்
தாசிக்கு மாகுங்கண் டாய்சீதக் காதி தயாநிதியே." (1)

"ஈயாத புல்ல ரிருந்தென்ன போயென்ன எட்டிமரம்
காயா திருந்தென்ன காய்த்துப் பலனென்ன கைவிரித்துப்
போயா சகமென் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
ஓயாம லீபவன் வேள்சீதக் காதி யொருவனுமே." (2)

"காய்ந்து சிவந்தது சூரிய காந்தி கலவியிலே
சோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண்க டொல்பலநூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்ச மனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக் காதி யிருகரமே." (3)

"ஓர்தட்டி லேபொன்னு மோர்தட்டி லேநெல்லு மொக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினுந்தட்டு வாராம லேயன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே." (4)

"தரைகண்ட மட்டும் படர்ந்தண்ட கோளமுந் தாவியெங்கும்
உரைகண்ட கீர்த்தி பெறுஞ்சீதக் காதி யுலகினில்வெண்
டிரைகண் டெழுங்கடன் மீதேதன் வங்கத்தைச் செல்லவிட்டுக்
கரைகண் டவனினங் காணானென் னாசைக் கடற்கரையே." (5)

எனச் சீதக்காதியின் பெருமை, ஈகை, வண்மை, புகழ் முதலிய அருஞ் செய்ல்களை அழகுபெறப் புனைந்து பாடி வாயார வாழ்த்தி அப் பிரபு சமுகத்திலேயே புலவர் திலகமாய் விளங்கி அவரால் நனகு மதிக்கப்பெற்று வாழ்ந்துவந்தன ரென்ப.

இங்ஙனம் புலவர் குழாங்கட்குக் கற்பகத்தருவெனத் திகழ்ந்த பிரபுகுல சிகாமணியாகிய சீதக்காதி வள்ளல் திடீரென மண்ணுலகை நீத்து விண்ணுல கேகினர். இது கண்ட புலவர், பிரபு உயிர் நீத்தமைக்கு ஆற்றாது உள்ள முடைந் துருகி,

"விண்ணுக்கு மண்ணுக்கும் வேராய் விளங்குதே வேந்த்ரனென்னும்
கண்ணுக் கினிய துரைசீதக் காதி கமலநிகர்
தண்ணுக் கிசைந்த வதனசந்த் ரோதய சாமியிந்த
மண்ணுக்குள் ளேயொளித் தான்புல வோர்முகம் வாடியதே." (1)

"தேட்டாளன் காயற் றுரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்ப நாட்டிவைத் தான்றமிழ் நாவலரை
ஓட்டாண்டி யாக்கி யவர்கடம் வாயி லொருபிடிமண்
போட்டா னவனு மொளித்தான் சமாதிக் குழிபுகுந்தே." (2)

"மறந்தா கிலுமரைக் காசுங் கொடாமட மாந்தர்மண்மேல்
இறந்தாவ தென்ன விருந்தாவ தென்ன விறந்துவிண்போய்ச்
சிறந்தாளுங் காயற் றுரைசீதக் காதி திரும்பிவந்து
பிறந்தா லொழியப் புலவோர் தமக்குப் பிழைப்பில்லையே." (3)

என இக் கவிகள் கூறி இரங்கினார்.

சீதக்காதி வள்ளலின் பிரிவாற்றாமைக்கு நமது புலவர் வருந்தியதுபோலவே, இவர் சமகாலத்து, சீதக்காதியின் சமூக வித்துவானாக விருந்த பாண்டிநாட்டு நமசிவாயப் புலவரும் அடியில் வரும் சாமகவிகள் கூறித் துக்கித்தன ரென்ப. அப் பாடல் வருமாறு :—

"பூமா திருந்தென் புவிமா திருந்தென்ன பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் னாவலர்க்குக்
கோமா னழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமா னிறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே."

"மைப்போ தகமும் வளநாடுஞ் செந்தமிழ் வாணர்க்கருள்
கைப்போ தகமனை யான்சீதக் காதியைக் காத்திருந்த
வப்போ தறிந்தில மிப்பாழ்ம் பணத்தி னருமையெல்லா
மிப்போ தறிந்தன மியாத லோப ரிடத்திற்சென்றே."

நற்றாய் சோதிடரை நிந்தித்ததாக வமைத்துக் கூறியது.

"மாகத்தத் தும்புக ழான்பகை வேந்தர் மகுடம்பொடி
யாகத்தத் தம்பரி யான்சீதக் காதி யணிமலரின்
எகத்தத் தும்பி யிசைபாடு மார்பனி லென்மகட்கோர்
மோகத்தத் துண்டென்று சொன்னீ ரிலைமுன் மொழிந்தவரே."

"தடக்கும்ப கிம்புரிக் கொம்பா சலபெருந் தந்திபட
நடக்குந் தரங்கத் துறைசீதக் காதிநன் னாட்டினல
வடக்குங் குமக்கொங்கைப் பெண்ணென் பவடெரு வாசலிலே
கிடக்குங் கவியும் பராச ரத்ன கிரீடமுமே."

பிரபுக்களின் கொடையின் சிறப்பைப்பற்றிக் கூறவந்த மற்றொரு புலவர், சீதக்காதியின் வள்ளன்மையை அடியில்வரும் கவியால் விளக்கியுள்ளார். அது,

"ஆராயும் வேதியர்க்கு ளாரு மில்லை
யறிவுகெட்ட வலையருமப் படியே யாவர்
சீராய துருக்கருக்குட் சீதக் காதி
சிறப்புடைய வணிகருக்குட் செந்தில் காத்தான்
காராளர் தங்களுக்குள் வெண்ணெ யூரான்
கருதரிய மறவருக்குண் மூவ ராயன்
போரான மூங்கிலணை நல்ல காமா
தொட்டியர்க்கு ணீயொருவன் பேற்பெற் றாயே."

(தனிச்செய்யுட்கோவை.)

இத் திருவமை சீதக்காதியின் சமாதி இன்றைக்கும் அழியாது கடற்கரையோரமாயுள்ள கீழக்கரையில் வழவழப்பான கருங்கல்லாற் செய்த வேலைப்பாடாக நல்ல நிலைமையில் இருந்துவருகின்றது.

தேடற்கரிய இத்தகைய அரும்பெருஞ் செல்வரைத் திடும்பிரவேசமாய் இழக்க நேரிட்டதால் அங்கிருக்க மனமின்றிக் குன்றமெறிந்து குரைகடல் சூர்தடிந்த குமரவேளின் தரிசனங் காணத் "திருச்செந்தூர்" அடைந்து நன்னீரலர்ந்த பன்னிரு கரத்தனைக் கண் குளிரத் தரிசித்து,

"முற்கரை யப்பரை யேறவிட் டாட்கொண் முதல்வருள்ளக்
கற்கரைக் கும்படி போதித் திடுங்கரு ணைக்கடலைச்
* சிற்பரைக் குட்டியை யெங்குந்தித் திக்குஞ் செழுங்கரும்பின்
சர்க்கரைக் கட்டியைக் கண்டேன்செந் தூரெனுந் தானத்திலே."

"முன்னநின் னன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச்சிந்திக்
கன்னமுங் கிள்ளிய நாளல்ல வேயென்னைக் காப்பதற்கே
அன்னமு மஞ்ஞையும் போலிரு பெண்கொண்ட வாண்பிள்ளைநீ
இன்னமுஞ் சின்னவன் றானோசெந் தூரி லிருப்பவனே." (2)

"சின்னஞ் சிறுபிள்ளை செங்கோட்டுப் பிள்ளை சிவந்தபிள்ளை
§ பொன்னன் மணிப்பிள்ளை பூலோக மெங்கும் புகழும்பிள்ளை
† சொன்னெஞ் சழல்கின்ற சூரனை வென்றசொக் கேசர்பிள்ளை
வன்னக் கிளிப்பிள்ளை செந்திக் குறத்திக்கு மாப்பிள்ளையே." (3)

¶"கல்லடிக்கு முளியிரண்டு காதடிக்கு ளடிப்பதெனக் கவிதைகேட்டுப்
பல்லடிக்கக் கிடுகிடெனப் பறையடிக்கு நெஞ்சர்தமைப் பாடுவேனோ
வில்லடிக்குங் கல்லடிக்கும் பிரம்படிக்கும் விரும்பிநின்ற மெய்யனீன்ற
செல்லடிக்குந் தடவரையிற் சேறடிக்க வலையடிக்குஞ் செந்திலானே."(4)

---

* ஞானசத்தியின் புதல்வனை.

§ பொன்னன் மணிப்பிள்ளை — பொன்னாலும் மணியாலும் அலங்கரிக்கப்பட்ட பிள்ளை.

† சொல்லும் மனமும் சுடுகின்ற, அல்லது வன்சொல்லும் வன்மனமும் உடையசனென்றபடி.

¶ இப் பாடலின் பொருள் :— அருச்சுனனது வில்லடிக்கும், பாண்டியனது பிரம்படிக்கும், சாக்கிய நாயனாரது கல்லடிக்கும் விரும்பி யிருந்த உண்மைப்பொருளான பரமசிவன் பெற்ற, மேகங்கள் தவழ்கின்ற பெரிய மலையின்மீது சேறு படும்படி அலைகள் மோதுகின்ற திருச்செந்

என்பது முதலிய செய்யுட்களால் துதித்து, மற்றும் சில சிவஸ்தலங்களைத் தரிசித்து வணங்கித் 0 "தண்டலைநீணெறி" யெனுந் தலத்தை யடைந்து, அங்குள்ள அன்பர்களின் வேண்டுகோளின்படி, "தண்டலையார் சதகம்" என்னும் ஓர் சதகம் இயற்றி அச் சந்நிதியில் அரங்கேற்றி அவ்வூர் அன்பர்களால் பல பரிசுபெற்று சிலநாளங்கு வசித்து, அங்கு நின்று நீங்கித் 1 தருமபுர வாதீன மடைந்து அப்பொழுது விளங்கிய ஞானசிரியர் உவக்குமாறு சிலகாலம் அணுகத் தொண்டராய் அமர்ந்து பின்னர், அவ் வாசிரியர் ஆக்கினைப்படி 2 வைத்தீச்சுரர் சந்நிதி யடைந்து அக் கடவுளின் கட்டளையை நடாத்திக்கொண்டு "படிக்காசுத் தம்பிரான்" என அதிகப் பிரபலமாக வாழும் நாளில் அத் தலத்தைச் சுட்டி "வேளூர்க் கலம்பகம்" என்னும் ஓர் பிரபந்தம் இயற்றி அரங்கேற்றி முடித்தனர். அதன் பின்னர், முன்னம் தமக்குப் படிக்காசு தந்து திருவருள் பாலித்த சிற் சபாநாயகர் சந்நிதியிலேயே தொண்டுசெய்து கதி யடையவேண்டுமென்னும் அவா மேலீட்டால், ஞானசிரியர் அநுமதி பெற்றுச் சிதம்பரத்தைச் சேர்ந்து ஒரு திருமடம் வகுத்து அதிலிருந்து கொண்டு அக் கடவுளுடைய திருத்தொண்டை வகித்துத் தினந்தோறும் ஆலயத்தை யடைந்து சபாநாயகரைத் தரிசிக்கும்போதெல்லாம் அக் கடவுள் பஞ்சாக்ஷரப் படியில் S பொற்காசு ஐந்து வைத் தருளப்பெற்றுச் சைவாசாரியராகச் சிலகாலம் நன் மாணக்கர்களுக்கு ஞானோபதேசம்

னானே! கல்லை வெட்டுகின்ற உளியானது இரண்டு காதுகளின் அடியில் அடிப்பதுபோலப் புலவர்களுடைய கவிகளைக் கேட்டுப் பற்கள் ஒன்றோடொன்று கிடுகிடென்றடிபட நடுங்குகின்ற மனத்தையுடையவரை நான் பாடுவேனோ? பாடமாட்டேன் என்றபடி.

திருச்செந்திலானே! என் கவிகளைக் கேட்டு மகிழும் உன்னைப் பாடாமல், அவற்றைக் காதடியில் உளிவைத்து அறைந்தாற்போல் இருப்பதென வெறுப்பாய்க் கேட்கும் லோபரைப் பாடுவேனோ என்பது கருத்து.

0 இத் தலம் — திருவாரூருக்குத் தெற்கில் 15-மைல். 1 இத் தலம் — காரைக்கால் ரயில்ஸ்டேஷனிலிருந்து மேற்கே அரை மைல். 2 இத் தலத்திற்குப் புள்ளிருக்குவேளூர் என்பது மற்றொரு பெயர். இது தஞ்சையிலிருந்து சென்னைக்குச் செல்லும் இருப்புப் பாதையில் ஓர் ரயில்ஸ்டேஷனாகவுள்ளது. சீகாழிக்குத் தென்மேற்கு 3½-மைல்.

S மனங் கசிந்துருகிப் பாடும் மெய்யடியார்க்குச் சிவபெருமான் பொற்காசு வைத்தருளும் வழக்குண்டென்பது திருவீழிமிழலையில்

பாலித்து, சில பிரபந்தங்களையுஞ் செய்தருளி அக் கடவுளுடைய திருவடி நீழல் அடைந்தன ரென்ப.

(வரும்.)

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

நியாயமாலா.

2-வது சதகம்.

(வெண்டமரை ரு, இதழ் ரு-சு, 123-ம் பக்கத் தொடர்ச்சி.)

15. **தாங்கோபசமன ஸ்நான நியாயம்:**— தரங்கம்=அலை, உபசமனம்=அடங்குதல், ஸ்நானம்=நீராடல், நியாயம்=திருஷ்டாந்தம்.

இது சம்சார காரியங்களொழிந்த பின்னர், முத்திக்கான நெறியிற் றலைப்படுவாமென் றிருத்தலிதுபோன்றதென்கின்றது. அதாவது: அலையடங்கிய பின்னர் சமுத்திரஸ்நானஞ் செய்வோமென் றிருத்தல் போலவென்கின்றது.

16. **வாயுர் நாவாம்பசி நியாயம்:**— வாயு=காற்று, நாவாம்பசி=நீரின் கண்ணதான மரக்கலம், நியாயம்=திருஷ்டாந்தம்.

இது இந்திரிய வசப்பட்ட ஜீவன் ஆசையா லலைக்கப்படலிது போலவென்கின்றது. அதாவது: நீரிடைப்பட்ட மரக்கலம் காற்று லலைக்கப்படல்போலவென்பதாம்.

17. **காகோலூக நிசி நியாயம்:**— காகம்=காக்கை, உலூகம்=கோட்டான், நிசி = இரவு, நியாயம் = திருஷ்டாந்தம்.

ஸ்ரீ ஞானசம்பந்த மூர்த்திகளும், திருநாவுக்கரையரும் எழுந்தருளியிருந்த போது வீழியப்பர் பொற்காசருளியதை,

“இருந்து நீர்தமி ழோடிசை கேட்குமிச்சையாற் காசுநித்தநல்கினீ
ரருந்தண் வீழிகொண்டீ ரடியேற்கு மருளுதிரே.”

என ஸ்ரீ சுந்தரமூர்த்திகள் பாடும் தேவாரத்தாற் றெரிகிறது. படிக்காசு வைத்தருளிய பலிபீடங்கள் இன்றைக்கும் திருவீழிமிழலை ஆலயத்தில் காட்சியினளவாயிருந்து இவ் வுண்மையை வலியுறுத்தும் சாதனமாக விளங்குகின்றன.

இது ஞானிக்கெது பகலோ அது அஞ்ஞானிகட்கிரவாம். (அதாவது: ஞானிகள் எந்தச் சிவ சொரூபத்தை யறிந்துகொண்டே யிருக்கின்றனரோ அச்சிவ சொரூபத்தை அஞ்ஞானிகள் உறங்குபவர்போலறிகின்றாரில்லை) அஞ்ஞானிகட்கெது பகலோ அது ஞானிகட்கிரவாம். (அதாவது: அஞ்ஞானிகளெந்தப் பிரபஞ்ச வியவகாரத்தில் விழிப்புடையவர்களா யிருக்கின்றனரோ அப்பிரபஞ்ச வியவகாரத்தை ஞானிகள் உறங்குபவர்போன்றறிகின்றாரில்லை என்னுமிது இதுபோலவென்கின்றது. அதாவது: காகத்திற்கெந்த உலகப் பிரசித்த பகலுண்டோ அது கோட்டான்களுக்கிரவும், கோட்டான்களுக்கெந்த உலகப் பிரசித்த இரவு பகலோ அது காக்கைகட்கு இரவுமாதல்போலவென்பதாம்.

18. **சித்திரபட நியாயம்:**— சித்திரபடம்=சித்திரம் வரையப்பட்ட வஸ்திரம், நியாயம்=திருஷ்டாந்தம்.

இது அதிஷ்டானப் பிரமத்தில் விசித்திர ஜகந்நிர்மாணமிது போன்றதென்கின்றது. அதாவது: வஸ்திரத்தின்கண்ணெழுதப்பட்ட பல்வகையான சித்திரங்கள் வஸ்திரத்தினும் வேறாதலின்றாவது இது போலவென்பதாம்.

(வரும்.)

இதோபதேசி.

நம் நாட்டுப் பென்ஸல்கள்.

கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்டவை, ஒட்டில்லாதவை.

கருப்பாக எழுதும்.

1. வார்னீஷ் சிவந்த மரம் குரோஸ் 1-க்கு ரூ. 3—12—0
2. பாலீஷ் சிவந்த மரம் குரோஸ் 1-க்கு ரூ. 3—6—0
3. வெள்ளை மரம் குரோஸ் 1-க்கு ரூ. 1—14—0
4. மங்கல் வெள்ளை மரம் குரோஸ் 1-க்கு ரூ. 1—2—0

தி. ஜானகிராம்,

நெ. 24, கலவைப் பாடசாலைவீதி,

புதுச்சேரி.

ஜனோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இப் பத்திரிகையில் கல்வி யபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், இந்திய வியவசாயத்தைப்பற்றிய பல விஷயங்கள், கைத்தொழில், வியாபாரம், கூட்டுறவு, ஜனஸமூஹத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், சிறந்த நீதிகளைப் போதிக்கக்கூடிய நாவல்கள், நாடகங்கள், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்கள், நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்கள், ஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உபயோகமான பல நற்போதங்கள் ஆகிய பல விஷயங்களைக் குறித்துச் சிறந்த கற்றறிந்தவர்களால் வியாசங்கள் எழுதப்பட்டு வருகின்றன. நடை தெளிவானது: சிறுவர் சிறுமியர் முதலிய யாவரும் சுலபமாய்ப் படித்தறியக்கூடியது.

வருஷ சந்தா விகிதம்.	இந்தியா, பர்மா, சிலோனுக்கு	ரு.	3—0—0
	வெளி நாடுகளுக்கு	,,	4—8—0

ஔவை.

நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதி நூல்களையும் தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம். பல நூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ணபரம்பரையை அநுசரித்தும் வேலூர் வூரீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் எழுதப்பட்டது.

விலை அணா 6.

"ஜனோபகாரி" சந்தாதாரர்களுக்கு மாத்திரம் அணா 5.

காரைக்காலம்மை சரிதை.

கற்பிலும் ஈசுவரபக்தியிலும் சிறந்த பெண்மணியும், சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும், தெய்வக் கவிஞருமாகிய காரைக்காலம்மையென்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம்.

விலை அணா 1.

மானேஜர்,

ஜனோபகாரி ஆபீஸ், வேலூர்.

இந்தியாவில் மிகப்பெரிதும்

பழமையுமான வைத்தியசாலை எது?

1881-ஹில் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்க நிக்ரஹ

ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு

சகல ரோகங்களையும்

குணப்படுத்தும்

சஞ்சீவி

பாலமித்ர.

300 மாத்ரை கொண்ட டப்பி 1-க்கு ருபா 1.

வியாதியைப்பற்றி விபரமாய் தெரிவிப்போருக்கு நன்றாய் ஆலோசனை செய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்.

இந்த

ஔஷதாலயத்தில் விருத்தவைத்திய பாரங்கதரும், வித்தியாபட்டம் பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

முதன்மையான

மருந்து சென்ற 35 வருஷ காலமாய் உபயோகிப்போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையும் கொடுத்து பெரும்புகழ்படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள் 32 மாத்ரையின் விலை ரூ 1.

வைத்தியசாஸ்திரி,
மணிசங்கர் கோவிந்தஜீ.
ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
157, பிராட்வே, மதராஸ்.

இருமல், கபம், காசம் இவைகளுக்குச் சிறந்த மருந்து.

காசாந்தக

மாத்ரைகள் டப்பி 1-க்கு விலை ரூ 1.

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனாமாய் அனுப்புகிறோம்.